# செல்லரித்துப்போன பாழ்பட்ட சமூகம்!


Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை முக்காலணு இலங்கை 8 ச ம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 8—5—51 | மணி 151


## லாபவேட்டைக்காரர்களல்ல நாம்!

................(0)................

## எதிரிகள் ஆட்சிப்பீடத்தின் சலுகை பெற்றவர்கள்!

(:0:)

### ஏசுவைக் காட்டிக்கொடுத்த ஜூடாஸ்கள் இன்னும் இருக்கிறார்கள்!

(ஃ)

### நா பெற, வேதனையும் தொல்லையும் நம்மை நாடியே வரும்!

### சேலம் மாநாட்டுத் தலைவர் தோழர் ஜான் பேச்சு

சேலம், மே 5—

"அரசியல் மன உணர்வும், அரசியல் விழிப்புணர்ச்சியும், பகுத்தறிவுணர்ச்சியும் ஒரு நாட்டு மக்களுக்கு ஏற்படாத வரை அந்த நாட்டின் அரசியல் வாழ்வு என்றைக்கும் விசையொடிந்துபோனதாகத்தானிருக்கும்"

"நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனஉணர்ச்சி இவைகளற்ற நாடும் இனமும் சுழற்காற்றில் அகப்பட்ட சருகுகள் போல அடித்தொதுக்கப்பட்டு எங்கோ தள்ளப்படும்."

என்று இன்று சேலத்தில் நடைபெற்ற தி. மு. க மாவட்ட மாநாட்டுத் தலைவர் தோழர் ஜான் அவர்கள் கூறினர், அவர் பேச்சின் சுருக்கம் பின்வருமாறு:—

குழுமியுள்ள கழகத் தோழர்களே! முன்னணி வீரர்களே! தாய்மார்களே! அறிஞர் அண்ணா அவர்களே! உங்கள் அனைவருக்கும் முதன் முதலாக என் நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மாவட்ட மாநாடுகளிலே இறுதி மாநாடாகவே யமைந்திருக்கும் இம்மாநாட்டிற்குத் திருவிதாங்கூர்-கொச்சி சமஸ்தானத்தின் தென்பால் அமைந்த தமிழ் நிலப்பரப்பாகிய நாஞ்சில் மாவட்டத்தைச் சார்ந்த என்னைத் தலைமைதாங்கக் கேட்டுக்கொண்ட மாநாட்டு வரவேற்புக் குழுவினருக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பன்னிரண்டாவது மாவட்ட மாநாடாக இம்மாநாடு, பலவகையிலும் கட்சிக்குப் பெருமை திரட்டித் தந்த சேலத்தில் கூடுகிறது! சேலம்! செயலாற்றும் தொண்டர்களைக் கொண்ட கட்சிக் கோட்டை! கோட்டை மதிற்சுவர்களில் நீங்கள் காணும் உடைந்த பகுதிகளெல்லாம், ஆட்சியாளர்களின் பீரங்கிகள் உமிழ்ந்த கனல் கட்டிகள் ஆக்கிக் காட்டிய கோலங்கள்! அவைகள் நம்மவரின் வெற்றிச் சின்னங்கள்! புது வேகத்தின் விசைக் கருவிகள்!

சேலம், மாளிகை வாசிகளுக்கும், குடிசைவாழ்வினருக்கும் இடையேயிருந்த மாபெரும் பள்ளத்தாக்கை நிரப்பும் வீண் வேலையிலே ஈடுபடாமல் குடிசை வாழ்வினரின் பாசறையாக, நம்மியக்கத்தை மாற்றிற்ற! திராவிட இயக்கத்தை மக்கள் இயக்கமாக, உழைப்பாளிகளின் பாசறையாக, ஜனநாயகவாதிகளின் பூந்தோட்டமாக மாற்றிய சேலம், கட்சி வரலாற்றில்

செங்கொடிழுக்கப்பட்ட சம்பவத்தை ஏற்படுத்தியநாளேயன்றோ? அதிலும் சிறப்பாக உலகப் பாட்டாளி வர்க்கத்திற்கு விடுதலை முழக்கத்தை எழுப்பிக் ஈட்டிய மகத்தான தினத்தில் கூடியிருக்கிறோம்! இது ஒன்றே திராவிட முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்களின் பாசறை என்பதை நிரூபிப்பதற்கு ஒரு வசதியை, வாய்ப்பை ஏற்படுத்திக் காட்டியிருக்கிறது!

பொதுமக்கள் தெரியாதிருந்த ஓர் இயக்கத்தை, அவர்கள் அதை தேர்தல் காலங்களைத்தவிர மற்றைய காலங்களில் தெரிய வேண்டிய

(2 ம் பக்கம் பார்க்க)

## காமராஜர் காட்டுராஜாவாயிருக்கிறார்!

................(0)................

## "இரகுபதிராகவராஜாராம்" பாட்டுப் பாடி மக்களை ஏமாற்ற முடியாது

..........................

### ஜாதி, மத வேறுபாடற்ற ஆட்சியே நமக்கு வேண்டும்

............(-)............

### சேலம் மாநாட்டில் தோழியர் சத்தியவாணிமுத்து பேச்சு

சேலம், மே 6—

சேலத்தில் நடைபெற்ற தி. மு. கழக முதல் மாவட்ட மாநாட்டில் திறப்புரையாற்றிய தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம் பின்வருமாறு:

தாய்மார்களே! தோழர்களே!!

இச் சேலம் மாவட்ட முதல் மாநாட்டைத் துவக்கும் பெரும் பணி தந்தமைக்குச் செயற்குழுவினருக்கு என் பணிவான வணக்கத்தையும் நன்றியையும் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

சேலம் மாநாடு என்று கூறக் கேட்டபோதே இங்கு நடந்த பல நிகழ்ச்சிகள் என் அகக்கண் முன் காட்சியளித்தன. ஜஸ்டிஸ் கட்சியானது தனது ஆட்சி நடத்தின போது பிராமணரல்லாதாருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கல்வி உத்தியோக துறைகளில் எவ்வளவோ நன்மைகளும் சலுகைகளும் செய்திருந்தும் அவற்றை மக்கள் உணராத வகைக்கு அன்றிருந்த தலைவர்கள் தங்கள் கட்சியை நாட்டில் பரப்பச் செல்வாக்கைப் பெருக்கி பொதுமக்கள் தொடர்பை வைத்துக்கொள்ளாது பதவியிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்ததின் பலனாக வெள்ளையன் செய்யும் சாண்டலையும் அடக்குமுறைகளையும் எடுத்துக் காட்டி நாட்டில் நல்வாழ்வுக்கான ஏழ்மையை எடுத்துக்காட்டி பொது மக்களின் கவனத்தை அதிகம் கவர்ந்திருந்த காங்கிரஸ் தேர்தலில் அமோக வெற்றி பெறவும் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியுறவும் நேர்ந்தது. இந்த மாகாணத்தில் மட்டுமல்லாது இந்தியாவெங்கும் காங்கிரசுக்கு வெற்றி தந்தது ஆச்சரியமல்ல. தேர்தலின் படிப்பினையை அறிந்த

3-ம் பக்கம் பார்க்க

# மாலை மணி

சென்னை 8—5—51 செவ்வாய்க்கிழமை


## உயிரைக்குடிக்கும்பிணிகள்

காங்கிரஸ் ஆட்சியால் மக்கள் கண்ட பலன் பஞ்சப் பிணியால் ஏற்படும் பரிதாப மரணங்கள் மட்டுமன்று; பிணிகள் பல நாடெங்கும் பரவி மக்களுயிரை நாடோறும் குடிக்கும் பெருங்கேடும் காங்கிரஸ் ஆட்சியின் பலனாக இந்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது.

இந்நாட்டில் ஒரு புறம் காலராவும் மற்றொரு புறம் வைசூரியும் மக்களுயிரை அன்றாடம் ஏராளமாக கொள்ளை கொண்டு போகின்றன. ஜனவரி 1-ஆந் தேதி முதல் ஏப்ரல் 7-ந் தேதிவரை 22,393 பேர் காலராவால் பீடிக்கப்பட்டு, 12,107 பேர் மாண்டு போயினா. 36,737 பேர் வைசூரியால் பீடிக்கப்பட்டு 7,757 பேர் மாண்டு போயினர்.

"இந் நோய்களால் பீடிக்கப் பட்டவர்கள் பெருவாரியாக மரணமடைவதற்குக் காரணம், போஷாப்பற்ற உணவின் காரணமாகவும், போதுமான உணவின்மை காரணமாகவும் மக்கள் வலுவிழந்து கிடப்பதும், நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராட ஆற்றலற்றுக் கிடப்பதுமேயாகும்" என்று சுகாதார அதிகாரி அறிவித்துள்ளார்.

மக்கள் நாளுக்கு நாள் வலுவற்றுப் போவதால், நாட்டில் தொத்து நோய்கள் பரவுவது மட்டுமன்று; மற்றச் சில்லறை நோய்களும் பரவி, மக்கட் சமுதாயமே பிணி பிடித்த சமுதாயமாகவும், மக்கள் எத்தகைய ஆற்றலும் சுறுசுறுப்பு மற்றவர்களாகவும் மாறி விடுவார்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இன்றுள்ள தமிழ் நாட்டுச் சமுதாயம் உணவில்லாக் குறையினால், உடலுரம் குன்றியது மட்டுமல்ல; நெஞ்சுரம் குன்றியவர்களாய், நடைப் பிணங்களாய். பிச்சை எடுக்கும் நிலைமைக்குத் தாழ்ந்து விட்டவர்களாய் மாறி விட்டிருப்பது கண்கூடாய்க் காணக்கிடக்கும் காட்சியாக இருக்கிறது.

ஆனால், இந்நாட்டுக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள், நாட்டின இத்தகைய கொடிய வறுமை நிலையை ஏற்றுக்கொள்ளவில்லை. உணவு அமைச்சரவையோ, இங்குள்ள மக்களுக்குப் போதுமான உணவு இருப்பதாகவே கருதுகிறது. ஆனால், இந்நாட்டில் பரவியுள்ள பிணிகளும், பட்டினிச்சாவுகளும் இந்தக் காங்கிரஸ்காரர்களின் கூற்றுகள் அனைத்தும் வெறும பாசாங்கும் நடிப்புமேயாகும் என்பதை நன்கு மெய்ப்பிக்கின்றன.

உணவில்லாமல ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு மக்கள் போய்க்கொண்டிருப்பதும் பட்டினிக்கொடுமையால் கண்டவற்றையெல்லாம் தின்பதுமே, நோய்கள் பரவுவதற்கும், புதிய புதிய நோய்கள் தோன்றுவதற்கும் காரணமாயிருக்கின்றன.

இவைமட்டுமில்லாமல், மக்கள் சுகாதாரம் பற்றி, காங்கிரஸ் அரசாங்கம் போதிய கவலை எடுத்துக்கொள்ளாமையும், கொடிய நோய்கள் பரவுவதற்கு மற்றொரு முக்கியக் காரணமாகும்.

இந்த நாட்டில் மொத்தம் 93 முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. இவற்றில் 10 முனிசிபாலிட்டிகளில் கூடச் சாக்கடைத் திட்டங்கள் சரியானபடி அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

இந்த 93 முனிசிபாலிட்டிகளில் குடிதண்ணீரை ஒழுங்கானபடி சப்ளை செய்வற்கான வசதிகளை 53 முனிசிபாலிட்டிகள் செய்திருக்கின்றன. ஆனால், சென்னை நகரக் கார்ப்பொரேஷன் உட்பட எந்த முனிசிபாலிட்டியும் மக்களுக்குப் போதுமான அளவு தண்ணீர் சப்ளை செய்ய முடியவில்லை. அதற்குத் தகுந்த வசதிகளோ இயந்திரங்களோ ஒரு முனிசிபாலிட்டியிலும் இல்லை.

சென்னை நகரசபையுட்பட, ஒவ்வொரு முனிசிபாலிட்டியும் தண்ணீர் சப்ளை எல்லா மக்களுக்கும் போதுமான அளவு செய்ய வேண்டிய அளவு பணமில்லை என்று கூறப்படுகிறது. இதே போன்று சாக்கடைகள் அமைக்கும் திட்டத்திற்கும் பணமில்லை என்று முனிசிபாலிட்டிகளும் சென்னையரசாங்கமும் கூறுகின்றன.

இந்நிலையில், சென்னை இராஜ்யத்தில், பொதுச் சுகாதார நிலை எப்படி ஒழுங்காக இருக்க முடியும?

மக்களுக்குப் போதுமான அளவு உண்ண உணவில்லை. அதனால் அவர்களுடைய உடல் நிலை எளிதில் பிணிகள் பற்றிக் கொள்ளக் கூடியவாறு உரங்குன்றிப்போயிருக்கின்றன. இத்தகைய சமயத்தில் சுகாதார வசதிகளும் குறைக்கப்பட்டு, குடி தண்ணீரும் ஒழுங்காக சப்ளை செய்யப்படாமல், சாக்கடைத் தண்ணீரும் ஒழுங்காக வளியேற்றப்படாமல் ஒரு நாடு ஆட்சி செய்யப்படுமானால், அந்நாட்டு மக்கள் கொள்ளை நோய்களுக்காளாகி மரணமடைவதில் வியப்பொன்றுமில்லையல்லவா?

காங்கிரஸ் ஆட்சி மக்களிடம் எந்த அளவில் அக்கரையுடன் வேலை செய்து வருகிறதென்பது நாட்டின் நிலையை, மக்களின் நிலையைக் காண்பதிலிருந்தே நன்கு விளங்கிவிடும்.

## செல்லரித்துப்போன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேவையே இல்லை என்ற அரசியல் சூதாடித்தனம் நடத்திய இலாப வேட்டைக்காரர்களின் கையிலே கிடந்து சிக்கிச்சீரழிந்தஓர் கட்சியை பொதுமக்களின் சொத்தாக, அவர்களுக்குரிய கவசமாக, கேடயமாக மாற்றிய பெருமைக்காக "சேலம்" மறக்க முடியாத நிகழ்ச்சியைச் சித்தரித்தபின் ஓவியக்காரனுக்கூட மாறியிருக்கிறது! அந்த வகையிலே சேலத்திலிருந்துதான் முதன் முதலாக, கட்சியிலே ஜனநாயகத் தென்றல் வீச ஆரம்பித்தது! அதன் விளைவுகள் ஏராளம்! பலன்கள் எண்ணிலடங்காதவை! ஆக இவ்வளவு அரசியல் சிறப்புப் பெற்ற சேலத்திலே நடைபெறும் இம்மாநாடு எந்தவகையிலும், முக்கியத்துவம் பெற்றதென்பதுதான் கருத்து. அதற்கு இங்கு குழுமியுள்ள உங்களின் உறுதி குலையாத கட்டுப்பாடான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

மாநாடுகள் கூடுவதும், அதிலே முன்னணி வீரர்கள் பேசுவதும், தீர்மானங்கள் நிறைவேற்றுவதும், பிற்பாடு கலைவதும் சாதாரணமான சங்கதிகள். மாநாடுகள் நம்மிடம் அந்தப் பண்பாட்டை எதிர்பார்க்காது என்பதென் கருத்து.

ஆகவே, காரியங்களிலேபொறுப்பும், கடமையும் காட்டத் துணை புரிவதுதான் நம்மவரின் கடமை என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது! மாநாட்டிற்குச் சென்றோம். பேச்சைக் கேட்டு ரசித்தோம் என்ற அளவோடு உங்கள் அரசியல் நோக்கம் அமைந்தால், நாட்டிற்கு அது ஓர் துரதிர்ஷ்டமாயிற்றே என்று வருந்துவதைத்தவிர வேறுவழியில்லை.

மாநாடுகள், நாம் கூட்டுவதன் முக்கிய நோக்கம் முன்கூறிய காரணத்திற்காக, அதன் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றி நடைமுறையில் கொண்டுவர நம்மவரை அந்தப் பொறுப்பிற்குத் தூண்டுகிறது! அந்த அடிப்படை வேலைதான் அரசியல் உணர்வை எழுப்புவது அதைத்தான் நமது மாநாடுகள் இன்றையத்தினம் செய்துகொண்டிருக்கின்றன.

அரசியல் மனவுணர்வும், அதன் காரணமாக ஏற்பட வேண்டிய அரசியல் விழிப்புணர்ச்சியும், இந்த உணர்வுகளைச் சரியான பாதை பார்த்துச் செலுத்தவேண்டிய பகுத்தறிவுணர்ச்சியும் ஒரு நாட்டு மக்களுக்கேற்படாதவரை, அந்த நாட்டின் அரசியல் வாழ்வு, என்றைக்கும், விசையொடிந்து போனதாகத்தானிருக்கும். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனவுணர்ச்சி இவையற்ற நாடும் இனமும் சுழற்காற்றிலே சிக்கிய சருகுகள் போல, அடித்தொதுக்கப்பட்டு எங்கோ தள்ளப்பட்டுப்போகும். அரசியல் விழிப்புணர்ச்சி பெற்ற மக்களாக, இந்த நாட்டுக்குரியவர்களை ஆக்குவதும், அதன் மூலம் அவர்களிருக்கும் தவிர்க்க முடியாத கடமைகளை நினைவுறுத்தவும், கடமைகளைக் செய்யும்போது ஏற்படும் கஷ்டங்கள், தகராறுகள், இவற்றை விளக்கவும்; அதிலிருந்து தப்புவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கூறவும் அதன் மூலம் இந்நாட்டவர்க்குரிய இலட்சியத்தைஅடையச் செய்யவுமே நாம் மாநாடுகள் கூட்டுகிறோம்! சுருங்கச் சொன்னால் நம் நாடு திராவிட நாடு—நாம் திராவிடர்கள்—நம் நாட்டை நாமே ஆள்வோம்—அதற்குரிய போராற்றல் பெற்றவர்களாக மக்களை மாற்றும் பயிற்சிக் கூடமாக மாநாடுகள் அமைகிறது என்றே கூறலாம்

எனவே மாநாட்டில் குழுமியுள்ள தாய்மார்களே! தோழர்களே நாம் மேற்கொண்டிருக்கும்பணி, உலகத்தின் எந்த அரசியல் கட்சிகளும் கொண்டிராதது வேதனையும் தொல்லையும் நிறைந்தது! எத்தனை தாக்குதல்களை நாம் சமாளிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்! சமூகம், பொருளாதாரம், அரசியல், கலை இன்னோரன்ன பிற முக்கியமான உயிர் பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் சிந்தித்துப் பேசி முடிவு கட்ட வேண்டிய பொறுப்பு தி.மு. கழகத்தைச் சார்ந்தது வளமான நாட்டையும்; வயற்காட்டையும் பெற்ற நாம், வருகின்ற மேதிகளெல்லாம் மேயும் பாழ் நிலமாக நம் நாட்டை ஆக்க எத்தனை நாளுக்கு அனுமதித்துக்கொண்டிருப்பது?

சமூக நெறியிலே மனிதர்களாக தோழமை யுணர்ச்சியோடு-வாழ்ந்த நாம் அடிமைப்பட்ட சூத்திரர்களாக எத்தனை நாளைக்குத்தான் வாழ்ந்துகொண்டிருப்பது?

கலையின் பேரைச் சொல்லி, மக்களை ஏய்க்கும் கூட்டத்தை வளரவிட்டு, உண்மைக் கலையின் ஒளி, நமது சமூகத்தை படரவிடாதவாறு எவ்வாறு காலந் தள்ளுவது? செல்லரித்துப்போன பாழ்பட்ட சமூக அமைப்பை இன்னும் கட்டிக் காத்துக்கொண்டு வாழ்வதுதான் எங்ஙனம் இயலும்?

குமுறும் இந்த சோகக் கேள்விக்கு விடைதான நமது அரசியல் கட்சி. இதற்கு விடை கண்டு பிடித்து அதைச் செயலில் காட்டும் வரையிலே தன் பணி தீராது! ஒதுங்கி நிற்க இயலாது!

இந்நூற்றாண்டு ஓர் அற்புதமான நூற்றாண்டு! ஆத்மாவையும் உடலையும் கட்டிப்பிணைக்கும் குருக்கள், ஜீயர்கள், பாதிரிகள், மன்னர்கள், எதேச்சாதிகாரிகள் இவர்களின் கை கால்கள் வெலவெலக்க, அவர்களால் பிணைக்கப்பட்ட மக்கள் தம் கால்களிலும் கைகளிலும் ஆத்மாவிலும் கட்டப்பட்டிருந்த சங்கிலித் தொடர்கள் தகர்த்தெறியப் பட்டது.

விடுதலை நாதம் தன் பலம் கொண்ட மட்டும் எக்காள ஒலி கிளப்புகின்றது, அதை தொடர்ந்து மகுடங்கள் சரிவதையும், ஜனப்புயலுக்குப் பின் வீசும் ஜனநாயகத் தென்றலையும் நாம் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

ஒரு பக்கம் செங்கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டு சைனா! அதன் பக்கத்திலே பர்மா! மிக அண்மையிலே பாகிஸ்தான், இங்கே நேபாளம்! அதற்குப் பக்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

# காமராஜர் காட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜஸ்டிஸ் பிரமுகர்கள் பெரியார் தலைமைக்கொண்டு தங்கள் கட்சியைப் பொதுமக்கள் இயக்கமாக ஆக்க வேண்டுமென்று முயற்சித்தார்கள், அதன் பலன்தான் 27-8-44,ல் சேலத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தைத் திராவிடர் கழகமாக மாற்றி அமைக்க ஏதுவாகியது. அதில் திராவிட நாட்டை மத்திய சர்க்காருக்குக் கட்டுப்படாத சுதந்திரக் குடியரசு நாடாகத் துண்டித்துவிட வேண்டுமென்றும் சாதிமத வேறுபாடுகளை ஒழித்துச்சாஸ்திரஸ்மிருதிபுராணங்களைப் பின் பற்றாமல் மடாதிபதிகளால் கோயில்களில் நடக்கும் அட்டூழியங்களை ஒழித்துக்கோயில் சொத்தைக் கல்வி வைத்தியம் முதலிய பொதுநலக் காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் பெண்களுக்கு சொத்துரிமைகலப்பு மணம் போன்ற பல உரிமையளிக்க வேண்டுமென்றும் கழகத்திலுள்ளோர் கௌரவப் பட்டம் வைத்துக்கொள்ளக் கூடாது, தேர்தலில் நிற்கக் கூடாது என்றும் பல தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

பட்டங்களைவிட வேண்டும் தேர்தலில் நிற்கக் கூடாது என்ற தீவிர திட்டங்களினால் ஜஸ்டிஸ் கட்சிக் 'கனம்கள்' எல்லாம் பிரிந்து போய்விட்டனர். நின்றவர் அவ்வளவும் பழையசுயமரியாதைக்காரர்கள், மாணவர்கள், இளைஞர்கள் மறுமலர்ச்சிக்காண முனைந்த மற்றும் பலர். இவர்களைக்கொண்டு கழகம் செயலாற்றிவந்தது.கொள்கைவேறுபாட்டின் காரணமாக அதுவும் பிரிந்து திராவிட கழகமாகவும், திராவிட முன்னேற்றக் கழகமாகவும் பணியாற்றி வருகிறோம் பல மாவட்ட மாநாடுகள் முடிந்து இப்போது இச்பசலம் மாவட்ட மாநாடான இங்கு கூடியுள்ளோம். இது முதல் நிகழ்ச்சி.

சேலம் சிறையில் 220 கம்யூனிஷ்ட் கைதிகள் மீது துப்பாக்கி குண்டுகள் வீசினர். 22 பேர் பிணமானார்கள். 137 பேர்கள் குண்டுகளால் தாக்கப்பட்டுச் சிகிச்சை செய்யப்பட்டனர்.

கழுகுகள் வட்டமிட்டனசேலத்தில், இது தக்ளியைக் கையிலேந்தி இராட்டினத்தின் 'ஓம்' என்ற சத்தத்தில் இரகுபதிராகவராஜாராம் என்ற பாட்டைப் பஜித்துக்கொண்டு, அகிம்சையின் சின்னமென்று கருதப்பட்ட காந்தியாரின் சீடர்கள் ஆட்சியில் நடைபெற்ற சம்பவம்.

1942-ல், ஆகஸ்ட் தியாகிகள், காங்கிரஸ்காரர்கள் நாசவேலை செய்து தியாகியானார்கள், நாசவேலை செய்கிறார்கள் என்ற பழி கூறிக் கம்யூனிஸ்டுகளை இப்படிக் கொன்று குவித்தனர். காங்கிரஸ்காரர்கள் செய்தது தியாகம், கம்யூனிஸ்டுகள் செய்தது நாசவேலை! வ. உ. சிதம்பரம்பிள்ளைக்கிழைத்த கொடுமையை இன்றும் சொல்லி வெள்ளையன் செய்த அக்கிரமத்தைச் சுட்டிக்காட்டும் காங்கிரஸ் தியாகிகள் 22உயிர்களைப்பதைக்கப்பதைக்கச் சுட்டுக்கொன்றதல்லாமல் இன்றும் ஒருவித தீர்ப்புங்கூறாது இருக்கின்றனர். உண்மையில் இவ்வளவிற்கும் இந்த மந்திரிகள்தான் பொறுப்பாளிகள். இவர்கள் தண்டிக்கப்படவேண்டியவர்கள். பொதுமக்கள் மன்றத்தில் நாளை இவர்கள் பதில் சொல்லவேண்டியவர்கள்.

அமெரிக்காவில் மந்திரிகள் செய்யும் அடாத செய்கையை மக்கள் நியாயமன்றத்தின் மூலம் தீர்ப்புக் கோரப்படுகிறார்கள்., குற்றமிருப்பின் தண்டிக்கப்படுகிறார்கள். ஆனால் அதன் வாரீசாக இருக்கும் இந்திய சர்க்காரின் ஆட்சியிலுள்ள நம் மாகாண சர்க்காரை யார் தட்டிக் கேட்பது?

மூன்றாவதாக சேலம் நெசவாளரின் உரிமைப்போர். அதன் கிளர்ச்சியின் பலன், மற்ற ஊர்களிலுள்ள நெசவாளரும் கையாண்டு அதனால் நெசவாளர் உலகமே சிறு வெற்றி கண்டது. உரிமைப்போரை முன்னின்று நடத்தியமைக்காகத் தோழர்கள் ஆ. சித்தையன், பூர்ணையா ஆகியோர்மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளனராம். இது விந்தையாகவே காணப்படுகிறது. யானை கொழுத்தால்தானேமண்ணை வாரிப் போட்டுக்கொள்ளுமாம்! ஏ. கே. கோபாலன், குமாரமங்கலம் வழக்கின் தீர்ப்பைச் சர்க்கார் மறந்திருக்கமாட்டார்கள் இவ்வளவு சீக்கிரம்.

சென்னையிலும் நெசவாளர் உரிமைப் போரைத் துவக்கியுள்ளனர். சட்டசபை முன்பு மறியல் செய்து பார்த்தார்கள் இப்பொழுதுதெருத் தெருவாய்-மந்திரி வீட்டு முன்பும் கூட பிச்சை எடுத்துத்தங்கள் நிலைமையை எடுத்துக் கூறுகிறார்கள். பசித்து நியாயம் கேட்கும் நெசவாளிக்கு சர்க்கார் மன நிம்மதிக்காவது ஆறுதல் கூறுகிறதா? தடியால் அடித்தும்; லாரியில் ஏற்றிச்சென்றும் கண்ணுக்கெட்டாத தூரத்தில் விட்டு வருகின்றனர். முன்பெல்லாம் இந்தி எதிர்ப்பாளர்களைக் காட்டில் விட்டு வந்ததைப்போல.

நான்காவதாக நம் கழகத்தோழர்களை அஹிம்சைச் சின்னங்களான காங்கிரஸ்காரர்கள் கண்களையும் கால்களையும் போக்கிய பரிதாபமான காட்சி இவ்வளவையும் கண்ட சேலம்தான் இன்று நம் கழக மாநாட்டையும் காணுகிறது.

தி. மு. க. துவக்கி ஒன்றரை ஆண்டுகளில் பல கூட்டங்கள், மாநாடுகள் நடத்தி நம் கொள்கைகளை நாடு பூராவும் பரப்பியதோடு நில்லாமல் வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி காட்டுவதன் மூலம் நம் திராவிட நாட்டுப் பிரிவினை ஆர்வ ஒலியை வடநாட்டிற்கும் எட்ட வைத்துள்ளோம். இந்த மாநாடு முடிந்ததும் அடுத்துச் சென்னையில் நடக்க இருக்கும் மாகாண மாநாட்டில் நம் எதிர்காலப் போராட்டத்திற்குரிய திட்டத்தை வகுத்துத் தருவார்கள் நம் தலைவர்கள்.

இந்த நாட்டில் உணவில்லாது பரிதவிக்கும் விவசாயிகள், நூலில்லாது கஷ்டப்படும் நெசவாளிகள், உழைத்து ஊதியம் காணாத தொழிலாளிகள் பலர் உணவு பற்றாமை காரணத்தால் வாடி வதங்கிப் பட்டினியால் உயிர்விடுவதும் தற்கொலை செய்துக் கொள்வதும் போன்ற நிகழ்ச்சிகள் பல.

வெள்ளையன் ஆட்சி தொலைந்தது ஆனால் நம் வாழ்வு உண்டாக்க வாக்குத் தந்த காங்கிரஸ் இன்று வெள்ளையன் செய்ய அஞ்சும் மோசமான மிகக் கேவலமான அடக்குமுறை—சாண்டல் ஆட்சியை நடத்துகிறதென்பதைஎல்லா மாகாணங்களும்உணர்ந்துவிட்டன. ஆட்சியின் திறனை அறிந்த இந்த மாகாணத்தவர் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நம் கண் முன்னே கண்டு வருகிறோம். "எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு" மாறி "எங்கும் உணவில்லை என்பதே பேச்சு" என்ற பஞ்சமும்—பட்டினியும் தலைவிரித்தாடுகிறது. உணவு மந்திரி முன்ஷியின் பெயர் பஞ்ச மந்திரி—மாமந்திரி என்று மக்கள் அழைக்கும் கேவல நிலைக்கு வந்துவிட்டது. மேற்கு வங்கத்திலுள்ள கூச்பீகாரில் பசித்த வயிற்றுக்கு உணவு கொடு என்று கேட்கச் சென்ற சோகச் சின்னங்களை அஹிம்சா மூர்த்திகள் துப்பாக்கிக் குண்டுகளைக் கொண்டு சுட்டுத் தள்ளியுள்ளார்கள். வெள்ளையன் டயர் ஆட்சியைவிட மோசமான நிலை. 7 வயது சிறுவன் 3 பெண்கள் உள்பட 6 பேர்கள் துடித்து மடிந்திருக்கின்றனர். 32 பேர்களுக்குக் காயம். தன் நாட்டின் தேவைக்கு மேல் உபரியாக உணவுப் பொருள் உற்பத்தியாகியும் பட்டினி போட்டுத் துப்பாக்கியால் சுடும் இந்த ஆட்சியை யார் வெறுக்காமலிருப்பர். அதே நிலையில்தான் நம்நாட்டு நெசவாளர்கள் இருக்கின்றனர். அதிகமான நூல் உற்பத்தியாகியும் மத்திய சர்க்காரிடம் கொடுத்துவிட்டு நம் மாகாணக் கைத்தறி நெசவாளர் தெருவில் நின்று பிச்சை எடுக்கின்றனர். தற்கொலை செய்துகொண்டு மடிகின்றனர். விநியோகிக்கும் முறை தெரியாதவர்கள் ஆட்சித் திறன் போதாதவர்கள் நடத்தும் ஆட்சியின் பலன் தான் இது விவசாயிகளுக்கு உதவி செய்யப் பணமில்லை ஆனால் விருந்து கேளிக்கைகளுக்குக் கணக்கில்லாமல் பணம் செலவிடப்படுகிறது. நேரு சென்னை வருகிறார் என்றால் எம். எஸ். சுப்புலட்சுமி சென்று 'ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா' என்று வரவேற்றால்தான் வரவு நல் வரவாகும். குடியரசுத் தலைவர் ராஜேந்திரப் பிரசாத்துக்கு சூரியகுமாரி கச்சேரிதான் விமரிசையாக காணப்படும். ரயில்வே மந்திரி கோபாலசாமி அய்யங்கார் லலிதா-பத்மினி நடனம் மூலம் ரயிலை ஓடச் செய்கிறார். ஏழை அழுகுரல் ஓர்புறம்-வரிப்பணம் பாழாகும் நிலை மற்றொரு புறம்-இழிநிலை ஓர்புறம்-கோலாகலம் மற்றொருபுறமாகக் காங்கிரஸ்காரர்கள் நாட்டை நாசமாக்குகிறார்கள்.

ஆட்சிதான் அப்படியென்றால் காங்கிரஸ் கட்சியாவது கண்யமாக நடக்கிறதா? பொருட்காட்சியில் மணல் பரப்பியதற்காக 51 ஆயிரம் ரூபாய் கக்கூஸ் கட்ட 46 ஆயிரம் ரூபாய் செலவாயிற்றென்று காங்கிரஸ்காரர்கள் கூறுகின்றனர். இதன் விவரம் வேண்டுமென்று கேட்ட S. P. ஆதித்தன் M. L. C.யைக் காங்கிரஸ் அங்கத்தினராககூட இருக்கக் கூடாதென்று விலக்கிவிட்டார்கள். மற்றும் பலரையும் விலக்கி இருக்கிறார்கள். காமராஜர் காட்டு ராஜாவாயிருக்கிறார். இவைகளை நாம் கேட்டால் உங்களால் ஆள முடியுமா என்று கேட்கிறார் காட்டு ராஜா காமராஜர். நாம்ஆள முடியாத ஆள தெரியாத-

அதற்கு அறிவுபோதாதகூட்டமே வெளியே வாருங்கள் என்று பலமுறை சொல்லி ஆகிவிட்டது.

---

ஆளும் திறன் எவ்வளவு தூரம் நாட்டை நாசமாக்கி இருக்கிறதென்பதைக்காட்ட உணவு நிலையே போதுமான சான்று. பர்மா-இந்தோனேஷ்யா, சைனா போன்ற இடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் தருவதாக வாக்குறுதி தந்தும் டாலர் அமெரிக்காவிடம் விஜயலட்சுமி அம்மையார் மடிபிச்சை எடுப்பதேன்? பார்லிமெண்ட் அங்கத்தினர் ஆளுக்கொரு டாலர் போடவேண்டும் என்று கேலிபேச்சு பேசுவானேன்? முதல் வருடத்தில் 10 லட்சம் டன் உணவு தான்யம் இனாமாகவும், இரண்டாம் வருடம் 10 லட்சம் கடனாகவும் கொடுக்கப் பார்லிமெண்டில் பேச்சு வார்த்தை எவ்வளவு அக்கரை பாருங்கள் அமெரிக்காவுக்குகெண்டையைப்போட்டு விராலை இழுக்கும் சூழ்ச்சி அமெரிக்கரின் எண்ணமெல்லாம் ஆசியாவில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும் அதற்கு இந்தியா அவர்களோடு ஒத்துழைக்க வேண்டும். ஐ. நா. சபையில் நடந்த நடவடிக்கையின் இரகசியம் இதுதான். நேருவின் மன ஆழத்தை ஆராய்ந்து பார்த்த அமெரிக்கபென்சில் வேனியா கலாசாலைத் தலைவர் எச் ஈ. ஸ்டேசன் என்பவர் நேரு அமெரிக்காவுக்கு விரோதியாகவும் தென்படவில்லை—ரஷ்யாவுக்கு நண்பனாகவும் இல்லையென்று (பூனைக்கும் தோழன்-பாலுக்கும் காவல்) என்ற நிலையில் இருக்கிறார் என்று தெரிவித்துள்ளார். நம்மோடு சுதந்திரமடைந்த பாகிஸ்தான், பின்னால் அடைந்த பர்மா, சிலோன், சைனா போன்ற நாடுகள் எவ்வளவு முன்னணியில் இருக்கின்றன. ஆண்டவனையும், அதிர்ஷ்டத்தையும் நம்பி

## காமராஜர்...

(முன் பக்க தொடர்ச்சி)

அர்த்த ராத்திரியில் அரசேற்ற நமது சர்க்கார் பிச்சை எடுக்கின்றனர். மங்களகரமான மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப்போடுங்கள் என்று கேட்டு இன்று மக்களை மடியவைக்கின்றனரே என்று கேட்டால் நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டுகின்றனர்.

சமீபத்தில் நமது கவர்னர் பவநகர் மகாராஜா கோவை வட்டாரத்தில் சென்று தாழ்த்தபபட்டவர்களின் அவலநிலையைக் கண்ணால் கண்டு மனம் நொந்துள்ளார். குண்டடம் என்ற கிராமத்தில் 500 பேர்கள் சோளக்கஞ்சியே 4, 5 நாட்களாக உண்பதாகவும், நவகொம்பு என்ற இடத்தில் இரண்டு அவுன்ஸ் தானியமே கிடைக்கிறதென்றும், கற்றாழைக்கிழங்கை இரண்டு மூன்று மாதங்களாக உண்டு வந்து இப்போது அதுவுமில்லாமல் கஷ்டப்படுகிறார்களென்றும் முறையிட்டு இருக்கின்றனர். ஏழு, எட்டு வயது சிறுவர்களிருவர் பட்டினியால் எலும்புந்தோலுமாய் உள்ளதைக் கண்டு மனம் நொந்து போனார்என்று தெரிகிறது. வேட்டமலையில் பெண்கள் கற்றாழைக் கிழங்கு, புண்ணாக்கு, பயறு வகைகள் இவைகளை உண்டு வருவதாகக் கூறியுள்ளனர். இது கிராமங்களில் உள்ள நிலையை எடுத்துக்காட்டுகிறது.

சென்னையில் வால்டாக்ஸ் ரோட்டுக்கருகிலுள்ள நிலத்தில் போட்டிருந்தக் குடிசைகளைப் பிய்த்தெறிந்து தாழ்த்தப்பட்ட மக்களை நடு நிசியில் அடித்து விரட்டியிருக்கிறார்கள் இந்த அரசாங்கத்தார்.

பஞ்சாபில் தாழ்த்தப்பட்ட மக்கள், நிலம் சொந்தமாக வைத்துக் கொள்ள உரிமை கிடையாது. இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கொண்டுதான் "தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற வகுப்பாரைவிட இன்னும் சுதந்தரமற்று கிடக்கின்றனர். காங்கிரஸ் ஆட்சியைவிட வெள்ளையன் ஆட்சியில் ஒரு சில சலுகைகள் பெற்றிருந்தனர் என்றும், காங்கிரஸ் வாக்குறுதியெல்லாம் காகித அளவிலேயே இருக்கிறது என்று மனம் புழுங்கி கூறியுள்ளார் டாக்டர் அம்பேத்கார் டெல்லியில் ஒரு விழாவில். அதுசமயம் மற்றொரு மந்திரி கித்வாய் அவர்களும் உடனிருந்திருக்கிறார். கலிகால மனு என்று எந்தவாய் டாக்டர் அம்பேத்காரைப் புகழ்ந்ததோ அதே வாயும் கையும் இன்று தயங்காமல் அவரைக் குறை கூற ஆரம்பித்துவிட்டன. சாணக்கிய வேலைகள் பலமாக நடக்கின்றன. அம்பேத்காரின் பரம விரோதி ராஜாஜி இப்பொழுதும் தம் காரியத்திலிருந்து நழுவவில்லை. நேருவிடம் தூபம் போட்டார் ஆனால் மௌனம் சாதிக்கிறார் நேரு. காங்கிரஸ் எரிந்து கொண்டிருக்கிற வீடு என்று முன்பே கூறியுள்ளார் டாக்டர் அம்பேத்கார் சாம்பலாகிற நேரத்தில் அங்கு என்னபூங்காவையாகாணமுடியும்? டாக்டரால் இன்றுள்ள நிலையில் தாழத்தப்பட்ட நிலையை அடியோடு ஒழித்துச் சம நிலை உண்டாகப் பாடுபடும் கட்சியோடு சேர்ந்து பணிபுரிவதே தாழ்த்தப்பட்டோர் தலைவரின் கடமை. இதனை டாக்டர் அம்பேத்கார் ராஜபோஜ் போன்ற தலைவர்கள் கூறுகின்றனர். இம்மாகாணத்தைப் பொருத்தவரை அந்த உயர் நிலையை ஆக்கித்தர திராவிட முன்னேற்றக் கழகம் தாயகம் என்று அழைப்பு விடுகிறேன். தாழ்த்தப்பட்ட தன்மையை வேரோடு களைந்து புதியஉருவத்தை நிலையைக் கொடுக்கச் சுரண்டல் ஒழிப்பு-பொருளாதார மாறுதல்-சமதர்ம குடியாட்சியின் மூலம்தான் முடியும் என்பதை பழங்குடிகள் மறந்துவிடக் கூடாது சிறு நன்மைக்காக—தனிப்பட்டோர் வாழ்விற்குச் சமூகத்தை விற்று விடாதபடி எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். தேர்தல் நெருங்குகிற இந்தச் சமயத்தில் பழங்குடிகளை வலை வீசுகின்றனர் காங்கிரஸ்காரர்கள். சேரிகளில் சென்று உழைக்கிறார்களாம். பல தந்திரங்களைக் கையாண்டு போலீஸ் துணைகொண்டும் சர்க்கார் ஊழியர்களைக்கொண்டு மிரட்டி ஓட்டுச்சேகரிக்க முயல்வார்கள் அதற்காக எதுவும் செய்ய முன்வருவார்கள். ஏனென்றால் சர்க்காரும் காங்கிரசும் பிணைந்திருப்பதால்.

பிரஜா உரிமைச் சங்க மாநாட்டிற்கு, ராஜாஜி மண்டபம் கொடுக்க சர்க்கார் மறுத்திருக்கின்றனர். அதை எதிர்த்துக் காரியதரிசி சி. வி. ராஜகோபாலாச்சாரியார் வழக்குத் தொடர்ந்துள்ளார். காங்கிரஸ் கமிட்டிக்கும்—மந்திரியின் மகளின் திருமண குதூகலத்திற்கும் ராஜாஜி மண்டபம் பயன்படும்போது பொது நல ஸ்தாபனங்களுக்கு மறுக்கப் படுவதை எதிர்த்து வாதாடுகிறார்.

தேர்தல் நெருங்கவே நம் பிரசாரத்தின் பலனை அனுபவிக்கப் பலபேர் பல பெயரில் கட்சிகளைத் தோற்றுவித்திருக்கிறார்கள். அது தவிர பிரகாசத்தின் பிரஜா பார்ட்டி—கிருபாலினியின் ஜனநாயக முன்னணி—சோஷியலிஸ்ட்—கம்யூனிஷ்டு—ராமநாதன் குடியரசு கட்சி—ஜஸ்டிஸ் பார்ட்டி ஆகியவை போட்டியிட வெளி வந்து விட்டனர். இதற்கிடையில் இந்துமகா சபைக்காரர்கள் பொது உடைமைக்கும்—முதலாளித்துவத்திற்கும் மிடையே பொன்னான மார்க்கம் தர முன்வந்திருக்கின்றனர். 'இந்துராஷ்ரா' ஏற்படுத்தி தனிப்பட்டோர் பொருளாதார அபிவிருத்தி செய்துகொள்ள ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தொழில் முன்னேற்றம் செய்ய முற்படுமாம்!

இப்போதுள்ள சர்க்கார் எந்த மதத்தை ஆதரித்து நடைபெறுகிறது. 'ராமராஜ்யம்' என்றல்லவா அழைக்கப்படுகிறது; பெயருக்குக் காகிதத்தில் மதச்சார்பற்ற அரசாங்கம். நடைமுறையில் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட சர்க்கார் தபால் முத்திரையில் திருமூர்த்தி, இந்துகோவில் முதலியன—இந்து பண்டிகைகளுக்கு ஓய்வு நாள் அதிகம். ராஜாஜி சோதிடம் பார்க்கிறார் டெல்லியில் இருந்து கொண்டு. இவ்வளவும் போதா தென்று சுத்த இந்து மத சர்க்கார் ஸ்தாபித்துப் பொன்னான மார்க்கத்தை உண்டு பண்ண இந்து மகா சபை—ராஷ்ட்ரீய சங்கத்தார் ஏன் வருகிறார்கள். இதன் பயன் எத்தனை மகாத்மாக்கள் உயிரை ருசி பார்க்க போகின்றார்களோ நாம் அறியோம்.

தேர்தல் என்னும் சுயம்வரத்தில் பொது மக்கள் என்னும் மனிதப் பெண் எங்கள் கழகத்தவரைத் தான் ஓட்டளித்து மாலை இடுவாள் என்று நன்றாகத் தெரிந்திருந்தும் நாங்கள் முன்வரவில்லை. மாலை அணிந்துகொள்ள நினைக்கும் மற்ற கட்சிகள் மூக்கருந்த பிறகு பொது மக்கள் எங்களை அழைப்பார்கள் மாகாணப் பிரிவினை. திட்டத்தை முதன்மையாக வைத்துத்தேர்தலில் நின்று வெற்றி பெற்று ஆட்சிபீடத்தை ஏற்போம் அதன்றி ஆட்சி ஏற்பதில் பயனில்லை. மத்திய ஆட்சி பிடியிலிருந்து இம்மாகாணம் விடுபட வேண்டும். குடியாசு தலைவரின் நாசிச போக்கின் சட்டத்தை நாம் வெறுக்கவேண்டும். 356 (1) எ பிரிவின்கீழ் உள்ள எந்த மாகாணத்தின் ஆட்சிப் பொறுப்பையும் குடியாசு தலைவர் எடுத்துக்கொள்ளலாம் என்ற நியதி அடிபடவேண்டும். எந்த மாகாணத்தின் வருமானத்தையும் தலைவர் எடுத்துக் கொள்ளலாம் என்ற சட்டமும் ஒழிய வேண்டும். இவைகளை முன்னிருத்தி நம் மாகாணம் மத்திய ஆட்சியிலிருந்து விடுபடவேண்டும். அந்த போராட்டத்திற்கு நம்மை பலமாக தயார் செய்து கொள்ள ஒரு உருப்படியான திட்டம் மாகாண மாநாட்டில் உருவாகும் என்பதை நாம் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். ஆகவே ஆர்வமுள்ள அனைவரும் கட்டுபாட்டுடன் தி. மு. கவின் கொடியின் கீழ் பணியாற்ற வாரீர். வெற்றி நிச்சயம் இந்த உண்மையோடு மறுமுறையும் இம் மாநாட்டின் உறுப்பினர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு இவ்வளவு நேரம் பொறுமையாக செவிமடுத்த உங்களுக்கும் என் வணக்கம் கூறி என் பேச்சை முடிக்கிறேன்.

## செல்லரித்து...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் இந்துஸ்தானம்! ஆனாலும் நாம்! திராவிட நாட்டவர்கள்! கால மாறுதலும் கருத்துமாறுதலும் நம் நாட்டில் தலைகாட்டவில்லை என்று கூறமுடியுமா? இந்த நாட்டுக்குரிய நாம், நம் நாட்டை அடையும் கிளர்ச்சியிலே ஈடுபட்டுவருகிறோம்!

நம் நாட்டைப்பற்றிப் பேச, நம் நாட்டின் விடுதலையை வற்புறுத்த நம் கட்சியைத்தவிர இந்த நாட்டிலே வேறு கட்சியே கிடையாது என்பது என் திட்டமான கருத்து! இன்று நம்மையாளுங்கட்சியும், அதன் மூலவர்களும் நம் நாட்டிற்குரியவர்களே என்றாலும் நம்மவர்கள் நலன்பேணும் தலைவர்களல்ல! நமக்கு அவர்கள் "லிங்மண்ரீ" போன்றவர்கள்! பொம்மைத் தலைவன் "பாவோடாய்" போன்றவர்கள்! நம்மை மதிக்காத, நம கலாசாரத்திற்கு மாறுபட்ட வேறு நாட்டினர்களின் ஏஜண்டுகள் அவர்கள்! அந்த வேறு நாட்டினரின் தாசர்கள்! எனவே அவர்களிடமிருந்து நாம் உரிமையோ, நீதியையோ, நல்ல ஆளுகை முறையையோ எதிர் பார்க்க முடியாதவர்களாகவுள்ளோம்! ஏனைய அரசியல் கட்சிகள் அரசியல் பேரம் பேசிகள்! இலாப வேட்டைக்காரர்கள்—நாட்டு நலத்திலே அவர்களுக்குள்ள அக்கறையைவிட சொந்த நலத்தில் அக்கரை மிக்கவர்கள். அவர்கள் கண்முன்னால் மக்கள் தம் நிலையோ, வராது! சட்டசபைகள் தெரியும், மந்திரி பீடங்கள் தெரியும்—கள்ள மார்க்கெட் தெரியும்—குவியும் பணம் தெரியும்—அதன் கணீர் ஒலி கேட்கும்! அந்தோ நாக்கிலிருந்து வழியும் நீரை உள்ளே இழுத்துக்கொண்டே "ஆஹா! அரசியல் வாழ்வே" என்ற பதிகம் பாடித்திரிபவர்கள்! மட்டரகமான இந்த அரசியல் வாதிகளைப்பற்றி நாம் கவனிக்க வேண்டிய அவசியத்திலேயில்லாதவர்கள். நாட்டுணர்ச்சி கொண்ட நல்லோரே! உங்களுக்கு மீண்டும் மீண்டும் கூறுகிறேன். நம் நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட முடியும் ஒரே கட்சி தி மு கழகம் நமக்கு நாமே துணை! நமக்காக உள்ள கட்சி தி மு. கழகம் ஒன்றே தான்! ஐரீஷ் மக்களின் விடுதலைப் பாசறையாக, 'சின்பீன்' இயக்கம் அமைத்ததைப்போல், நமது விடுதலைப் போர்ப் பாசறையாக முன்னேற்றக் கழகம் கண்டிருக்கிறோம்! ஆனாலும் துரதிருஷ்டம் இயற்கையானதுதான், நாம் காட்டிக்கொடுப்பவர்களின் மத்தியிலே இருக்கிறோம்! காட்டிக் கொடுப்பவர்கள் எப்போதும் எங்கும்தான் இருக்கிறார்கள். பாரசீக மன்னனுக்கு தன் நாட்டை; நாட்டின் இரகசிய நுழைவு வாயிலைக் காட்டிக் கொடுத்தான் துரோகி. 'எபியால்டிஸ்' என்னும் கிரேக்கன்! அதன் மூலம், "லியோனிதாஸ்" அவன் உட்பட முன்னூறு வீரர்களும், கெடுவாழ்வின் பெரும் புகழைச் சாவில் நட்டார்கள்! அதன் மூலம் அந்தத் துரோகி, கிரேக்க வரலாற்றின் கறைபடிய வைத்தான்.

ஏசுநாதரைக் காட்டிக்கொடுத்த ஜுடாஸ்கள் இன்னும்நான் இருக்கிறார்கள்! என்றைக்குமிருப்பார்கள்.

காட்டிக்கொடுப்பவர்களும், நாட்டைக் காவு கொடுப்பவர்களும் பெருகிவரும் நாட்களிலேதான் நீங்களும் நானும் இருக்கிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள். எங்கு எப்போது பார்த்தாலும் ஆபத்து நிரம்பிய இடம் நாம் வாழுமிடம்!

எதிரிகள் ஆட்சிப் பீடத்தின் சலுகை பெற்றவர்கள். நிச்சயமாக அவர்கள் ஆண்டவனின் கடாட்சமும் பெற்றவர்களாகத்தானே இருப்பார்கள்! நமக்கு முன்னவர்கள் துச்சமானவர்கள்! பின்னவர்கள் கவலைக்குரியவர்களுமல்லர்! என்றாலும் நம் பணி மகத்தானது. கட்டுப்பாடான ஒத்துழைப்பும், கண்ணியமும், உறுதிப்பாடும் தவிர்க்க இயலாததேயாகும்.

(தொடரும்)

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthr mari Chettv Street, Madras-1.